**அசல் வழக்கு எண். 22/2021** **தேதி 03-04-2025**

**வா.சா.1 - கோவிந்தராஜ்**

**<u>1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் கோயம்புத்தூரில் இருந்து வருகிறேன். நான் வசிப்பதும் தொழில் செய்வதும் கோயம்புத்தூரில் தான். நான் கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், பாலப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பிராது, இடைக்கால மனு ஆகியவற்றை படித்து பார்த்தேனா என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் சரிதான். பிராதை, இடைக்கால மனுவையோ திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். எதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நடுப்பண்னை கோவிலின் உரிமையாளர் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது முப்பாட்டன் பெயர் என்ன என்றால் எனக்கு பெயர் தெரியவில்லை. பெரியபண்னையின் முப்பாட்டன் முருகனை என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சின்ன பண்னையின் முபபாட்டன் பெயர் மாணிக்கம் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது.

2. மொத்தம் இரண்டு பண்னை தான் இருந்தது என்றும், அது பெரிய பண்னை மற்றும் சின்ன பண்னை என்றாலும், நடுப்பண்னை என்ற ஒன்று இல்லை என்றாலும் சரியல்ல. 1979 ல் மேற்படி நடுப்பண்னை கோவில் கட்டப்பட்டது. தற்போது வரை இருந்து வருகிறது. மேற்படி விவரத்தை எனது பிராதோ, வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு பிராதோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதிகளை தவிர நடுப்பண்னையில் யார் யார் இருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியுமா முடியும். சுதாகர், பழனிச்சாமி, வையாபுரி, குமரேசன், வேலு மற்றும் பலர் இருக்கிறார்கள். எனக்கு என்ன உரிமை இருப்பதாக சொல்லியுள்ளேனோ அதே உரிமை மேற்ச்சொன்ன நபர்களுக்கும் உள்ளது என்றால் சரிதான். மேற்ச்சொன்ன நபர்கள் இவ்வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் பெரிய பண்னையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் அல்லாமல் மேலும் பலர் பெரிய பண்னையில் உள்ளார்கள் என்றால் உள்ளார்கள்.

3. அவர்கள் சண்முகம், காளி, செல்வம், பழனிச்சாமி , மாணிக்கம் மற்றும் பலர் உள்ளார்கள். மேற்சொன்ன நபர்களையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளான பெரிய பண்னையை சேர்ந்தவர்களுக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை தான் மேற்ச்சொன்ன நபர்களுக்கும் உள்ளது என்றால் சரிதான். 5 முதல் 8 பிரதிவாதிகள் சின்ன பண்னையை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். 5 முதல் 8 பிரதிவாதிகள் அல்லாமல் வேறு சிலரும் சின்ன பண்னையில் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் முருகன், முத்துவீரன், பழனிச்சாமி, செல்வம்,மணி மற்றும் பலர் உள்ளார்கள். மேற்சொன்ன நபர்களை வழககில்

தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 5 முதல் 8 பிரதிவாதிகளான சின்ன பண்ணையை சேர்ந்தவர்களுக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை தான் மேற்சொன்ன நபர்களுக்கும் உள்ளது என்றால் சரிதான். அவசிய தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்காத காரணத்திற்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

4. நடுப்பண்ணையை சேர்ந்த மற்ற நபர்களை இவ்வழக்கில் சேர்க்காத காரணத்தினாலும் இவ்வழகவு பிரநிதித்துவ வழக்காக தாக்கல் செய்யாத காரணத்தினாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பரிகாரம் ஏதும் வழங்கினால் இவ்வழக்கின் தரப்பினர்கள் அல்லாத மற்ற பண்ணையை சேர்ந்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**